Reg. No. M. 2997.

தனிப்பிரதி 1 அணு

ஆசிரியர் :
யாழ்ப்பாணம்
தென்கோவை.
ச. கந்தையபிள்ளை
தமிழ்ப் பண்டிதர்,
சிலோன்.

REPUBLIQUE FRANÇAISE

Liberté - Egalité - Fraternité

VITTAGAM

LE REDACTEUR
TENKOVAI
S. CANDIAH PILLAI
TAMIL PANDIT
JAFFNA
CEYLON.

JOURNAL HEBDOMADAIRE PARAISSANT LE JEUDI

வித்தகம்

வியாழக்கிழமை தோறும் வெளிவருவது

நத்தம்போற் கேடு முளதாகுஞ் சாக்காடும்
வித்தகர்க் கல்லா லரிது.— குறள்.

VOL, I. { புதுவை, ஸ்ரீமுகவரு தை மீ ௫ ௨ (18—1—34) } No. 8

அப்பர் தேவாரம்

சாத்திரம்பலபேசுஞ்சழக்கர்காள்
கோத்திரமுங்குலமுங்கொண்டென்செய்வீர்
பாத்திரஞ்சிவமென்றுபணிதிரேன்
மாத்திரைக்குளருளுமாற்பேறரே.

இருந்துசொல்லுவன்கேண்மின்களேழைகாள்
அருந்தவந்தருமஞ்செழுத்தோதினல்
பொருந்துநோய்பிணிபோகத்துரப்பதோர்
மருந்துமாகுவர்மன்னுமாற்பேறரே.

சாற்றிச்சொல்லுவன்கேண்மின்றரணியீர்
ஏற்றின்மேல்வருவான்கழலேத்திஞல்
கூற்றைநீக்கிக்குறைவறுத்தாள்வதோர்
மாற்றிலாச் செம்பொனுவர்மாற்பேறரே.

உ

திருவருள் துணை

ம
நந்தி பதி
கோல்

காலமுண்டாகவே காதல்
செய்துய்மின் கருதரிய
ஞாலமுண்டானொடு நான்முகன்
வானவர் நண்ணரிய
ஆலமுண்டானெங்கள் பாண்டிப்
பிரான்தன் னடியவர்க்கு
மூலபண்டாரம் வழங்கு
கின்றான்வந்து முந்துமினே.

(திருவாசகம்.)

வித்தகம்

புதுவை,

ஸ்ரீமுக தைமீ 5௨

தமிழ் நெடுங்கணக்குத் திருத்தத் தீர்மானம்

இன்னும் முன்னர்ச் சென்னைமாநகரில் கூடிய தமிழ் அன்பர் மகா நாட்டாருள்ளே "தமிழ் நெடுங்கணக்குத் திருத்தத் தீர்மான"க் குழுவினர்க்குப் "புதுவைத் தமிழன்" செய்து கொண்ட விண்ணப்பம் "வித்தகம்" இல 6 பக்கம்7 இல் மிளிர்கின்றது. அவ்விண்ணப்பத்தில் கூறப்பட்டவாறு தற்காலச் சமய நிலைக்கு ஒப்ப உயிர் பன்னிரண்டும் போதும் என அமைந்துவிட்டால் (றிப்போர்ட்டை ஒரு கொடியில் பூர்த்தி செய்து விட்டால்) யாது சங்கடமும் இல்லை. ஏனெனில், மெய்யை விட்டு உயிரோடு நின்றுவிட முடியுமானால் லௌகிகமும் இல்லை; பாரமார்த்திகமும் இல்லை. பின்னர் எஞ்சியது என்ன? சர்வ சூனியந்தான். இது நிற்க.

ஆலவாயில் அவிர்சடைக் கடவுளாகிய இறையனாரும், ஒலிகட்கெல்லாம் பிறப்பிடமாகிய நாதபீடத்தை அநுபவமாய் உணர்ந்த தத்துவப் பெரியாராகிய அகத்தியனாரும், பழைய நூல் எனப் பொருள் படும் "தொல்காப்பியம்" யாத்த கிழவனாரும் வரையறுத்து உரைத்த இலக்கண வரம்பினை உடையதும் அரிய பெரிய தெய்வ மறைகள் பலவற்றை உடையதும் ஆராய்ச்சி வல்லுநர் என்பார்க்கும் எட்டாத அளப்பரும் பல்லூழி தொட்டு இயற்கை நிலை மாறாது மேம்பாடுற்று மிளிர்வதுமாகிய அமிழ்தனைய தமிழ் மொழியின் மாண்பு கண்டு அதனை மேலும் மேம்படச் செய்யுமாறு சூழ்ச்சிகள் பல புரிந்து மகாநாடு கூட்டிய "தமிழ் அன்பர்" பரோபகாரப் பண்பு வியக்கற்பாலதன்றோ! அம்மகா நாட்டில் "தீர்மானங்கள்" பலவற்றையும் ஏகமனமுடையராய் இனிது நிறைவேற்றி விட்டனர் எமது தமிழ் அன்பர்கள். அவற்றுள் "தமிழ் நெடுங்கணக்கில் சீர்திருத்தம்" என்பது இறுதித் தீர்மானமாய்—மகா நாட்டுச் சித்தாந்தமாய் மன்னி நிற்கின்றது. இந்த இறுதித் "தீர்மானம்" தமிழ் அன்னையின் இணையிலாத் தனியுருவைப் பாழ்படுத்தி மற்றைய தீர்மானங்களையும் பயனிலவாக்குகின்றதென்பது அத்தமிழ் அன்னையின் உழுவல் அன்பினர் என வெளிப்பட்டுப் பிறரையும் அத்தகைய அன்பு நெறியில் ஈடுபடுமாறு அறைகூவி நின்று மகாநாடு கூட்டிய மேதாவிகளுக்கும் புலப்படாது போயிற்றே என்பது தான் கவலைக்கு இடமாகின்றது. ஆயினும் இன்னோரன்ன தீர்மானமும் உலகியலே என ஒருவாறு அமைந்து அவ்வுலகியலை உணர்த்து முகத்தால் உண்மையையும் ஒரு சிறிது கூறி, அவ்வுண்மை கடைப்பிடித்து ஆன்றோர் ஆசாரம் பாதுகாத்து ஒழுகி இத்தகைய விபரீதமான "தீர்மானங்"களால் தமிழ் அன்னையைப் பாழ்படுத்தாது வாளாங்கு வதியுமாறு அன்னாரை மிக்க பணிவுடன் வேண்டிக் கொள்வதும் அவசியமே ஆகின்றது.

சரீரம் அநித்தியம். சரீரத்துக்கு இன்றியமையாத உணவும் அநித்தியம். இணைவிழைச்சும் அநித்தியம். சுருங்கச் சொல்லுமிடத்து "மண், பெண், பொன்" இம்மூன்றும் அநித்தியம். ஆதலால் மாயா சொரூபங்கள் நம்மை மயக்கி நரகத்துக்கே ஆளாக்கிப் பாழாக்கிவிடும் என்பது ஆன்றோர் கொள்கையும் உண்மையும் ஆம். இதனைச் சகல மதத்தினரும் ஏக மனத்தராய் ஆமோதித்து இத் "தீர்மான"த்தை நிறைவேற்றி விட்டனர். நூல்கள் மூலமாயும் வெளியிட்டு விட்டனர். இம்மாயா காரியமாகிய சரீரம் என்னும் தன்னிலையும் உலகாதி மாயா காரியங்களாகிய (மண் பொன் பெண் என்னும் ஈஷணாத்திரயங்கள்) முன்னிலையும் பயனற்றன எனத் துணியப்பட்டனவாதலால் அவைகளைப் பற்றிய கவலை சிறிதும் இன்றி—பற்றுக்கோடின்றி வாழ்ந்து மரணம் நேரிடும் காலம் (அறிவு மயங்கி அழிவுறுங்காலம்) பற்றற்ற இடம் ஒன்று தோன்றும் எனவும் உடனே, இம்மாயை வலையை அறுத்து விட்டு, அப்பற்றற்ற இடத்தில் ஒரேபாய்ச்சலாகப் பாய்ந்து அந்த இடத்தைப் பிடித்துக் கொண்டால் "அதுவாகி" விடலாம் எனவும் ஏக மனத்தராய் ஆமோதித்து முடிந்த முடிபாகிய இந்த இறுதித் "தீர்மான"த்தையும் இனிது நிறைவேற்றிவிட்டனர். இதுதான் உலகியல்—கஷ்டம் சிறிதும் இல்லாத சுலபமான மார்க்கம் எனப் பலரும் கண்டுபிடித்து அகமிக மகிழ்ந்து வாழ்ந்து ஒலிவரிவடிவங்களால் ஆன்றோரால் பாஷை என ஆக்கப்பட்டு அரண்செய்யப்பட்டது ஒன்றைப் படித்து அப்பாஷையைக் கற்றுணர்ந்த நிலைக்கு ஏற்ப—தம் தம் அறிவிற்கும் ஞாபக சக்திக்கும்

எற்ப சில வியாசங்களையோ கவிகளையோ வெளியிட்டுச் சில நடைநொடி பாவனைகளையும் கையாண்டு விதியினால் ஏற்படுத்தப்பட்ட கால அளவு முடிந்தபோது மாண்டுபோகின்றனர் (உலக சம்பிரதாயம் நோக்கி) முத்தி அடைகின்றனர் என உபசரித்துக் கூறினும் ஆம்.

மேலே கூறிய தீர்மானங்கள் முழுவதையும் பொய் என்று கூற முடியுமா? உலகில் உள்ள சகல மதத்தினரின் பொதுக்கொள்கை இதுவே. இக் கொள்கையால் “சர்வமத ஐக்கியம்” பெறப்படுகின்றது அல்லவா? “ப்ரம்ம ஞான சபை” (Theosophical Society) என்பதும் இன்ன நீர்மையதே ஆதலால் “சர்வமத ஐக்கியம்” என்னும் முறையில் வெளியிடப்பட்டுக் கையாளப்பட்டுவரும் இன்னோரன்ன “தீர்மானங்”களுக்கு (சித்தாந்தங்களுக்கு) மாறாக “வித்தகம்” என்னும் ஞானசூரியன் சிலபல கூறி அனைவரையும் தெருட்டுவான் முயன்று பின் வருமாறு ஓலமிடுகின்றனன்:—

“அருமை வாய்ந்து பெருமையுடன்
“வதியும் எமது உடன் பிறந்த மக்
“காள்! அந்தோ! கெட்டுப்போகாதீர்
“கள்! காய்தல் உவத்தல் அகற்றி
“உண்மையை ஆராய்ந்து பாருங்கள்;
“நீங்கள் ஏகமனத்தராய் ஆமோதி
“த்து நிறைவேற்றிய தீர்மானங்கள்
“முழுவதும் தவறுடையன அல்ல.
“எனினும் ஆன்றோர் வாக்கியங்களில்
“புதைந்து மறைந்து கிடக்கும் இரகசி
“யங்களை—மறை பொருள்களை—மறை
“களைக் காணும் ஆற்றல் உங்களுக்கு
“இல்லை. ஆதலால் நீங்கள் செய்து
“கொண்ட தீர்மானம் படிறே! அத்
“தீர்மானத்தால் வரையறுக்கப்பட்ட—
“அரண் செய்யப்பட்ட—அரட்டிக்கப்
“பட்ட கொள்கைகள் அனைத்தும்
“படிறுகளே! உலகம் மாயாசொரு
“பம்—பொய்த்தோற்றம் என்று நீங்
“கள் சொல்லுவது மெய்யே! ஆனால்
“அதைப் புறக்கணிப்பது படிறே!
“அம்மாயையை நிறை கண்டு பஞ்சீக
“ரித்துத் தான்—உறவு செய் தான்
“அதனை வெல்லவேண்டும்—வென்று
“கரை யேறவேண்டும் என்பதே
“வேத உண்மை. இதனை அறியாது
“அம்மாயை வலையில் அகப்பட்டு—
“விதி வசப்பட்டு மாண்டபின் அம்
“மாயை வலையை அறுத்து மேலே
“கிளம்பிப் பாய்ந்து “அதுவாகி” விட
“லாம் என நீங்கள் கூறுவது பொய்
“யே—முயற்கொம்பே! இதுவே உய்
“யுந்திறன் என அமைவது உங்கள்
“அறியாமையே! ஆதலாற்றான் உங்
“கள் தீர்மானங்கள் முழுவதும் தவறு
“டையன அல்ல எனக் கூறினேன்.
“உண்மையை அறிவதென்றால் முடி
“யாத காரியமே. அஃதாவது மிகக்
“கடினமே! அறிந்தவர் கூறவே பிறர்
“அறியவேண்டும். வேறு தடம்
“இல்லை.” என்று கூறி உண்மை இது எனக்காட்டி யாவரையும் உய்தியடையச் செய்வதற்கு ஆரம்பஞ் செய்கின்றான் எமது “வித்தக” ஞான சூரியன்.

மேலே கூறியது போலவே, “தமிழ் அன்பர் மகாநாட்டு” த்தீர்மானங்களும் முழுவதும் தவறுடையன அல்ல என்று கூறுகின்றோம். சிவர்கள் யாவராலும் காண்டற்கும் கருதற்கும் எட்டாததாய் அருமறை முடிபாய் உள்ள “ஒலி பீடம்” என்னும் தடத்தைக் கண்டு அதனாலாய பூரணமான அறிவின் பயனாகத் தத்துவப் பெரியாராகிய உத்தமர் உயிர் 12 எனவும், மெய் 18 எனவும், உயிரும் மெய்யும் சேர்ந்து பஞ்சீகரணிக்கப்பட்டு பெருக்கப்பட்டு 216 ஆயின உயிர்மெய் எனவும், உயிருமன்றி மெய்யுமன்றித் தனி இயல் பெற்ற உருவம் ஒன்று உளது எனவும் அதுவே ஆயுதம் எனவும் வரையறுத்து இவ்வெழுத்துக்களால் ஆயது ஒரு பாஷை என்று—தமிழ் என்று திருவாய் மலர்ந்தருளினர். இயற்கை முறையான் அமைந்த இத்தகைய மாண்புடைய எழுத்துக்களுள்ளே சிலவற்றை நீக்கிவிடவும் பிற சிலவற்றைப் புகுத்திவிடவும் இப்பொழுதை மகா நாட்டார் (கம்மிற்றியில்) ஆலோசிக்கின்றனர் ஆம். என்னே உலகியல்!

216 எழுத்துக்கள் எப்படி வந்தன? உயிர் 12 ஏன்? அவை எப்படி வந்தன? அவை எழு என்றும் பத்து என்றும் ஏன் கூறப்படவில்லை? மெய் 18 ஏன்? அவை எப்படி வந்தன? ஆய்தம் என்னும் தனி இயல் பெற்ற உருவம் ஏன்? இவ் வினாக்களுக்கு விடை இறுக்கும் ஆற்றல் இம் மகா நாட்டாருக்குத்தான் “கம்மிற்றி” யாருக்குத்தான் உளதாயின் அவர் ஒலிவரிவடிவங்களில் சிலவற்றை அகற்றவும் பிற சிலவற்றைப் புகுத்தவும் உரிமை உடையர் என ஆம். 216 எழுத்துக்களுக்குக் காரணம் காணமுடியாது அவற்றில் திருத்தம் செய்துவிட முயலும் இப்பெரியார் 217-வது எழுத்தாகிய ஆயுத எழுத்தை மறந்துவிட்டதன் காரணம் தான் என்னை?
“அவ் எழுத்து எவ்வித பொருளும்
“பயக்காத மூன்று சுழிகளாய் முக்
“கோண வடிவமாய் அமைந்திருப்பது
“எமது தமிழ்த் தாய்க்கே பெரிய
“அவமானத்தை விளைத்து விடுமே”
எனக் கருதினர் கொல்லோ? எழுத்துக்களின் இலக்கணம் இலக்கியம் இன்னவை என அறியும் ஆற்றல் இல்லாதார் தத்துவப் பெரியாரால் சேமித்துவைக்கப் பட்டனவற்றை அநுபவித்துச் சுகமடைய முடியாதபோது குற்றம் யாருடையது? பயனற்ற காரியங்களைத் தான் தத்துவப் பெரியார் எமக்குச் சேமநிதியாக வைத்துவிட்டுப் போயினர் என்று கூறுவது தான் அறிவுடையோர் செயலாகுமா? பளா! பளா! நன்று! நன்று!

நாள் ஒன்றுக்கு 21600 சுவாசங்கள் மனிதனிடத்தில் இருபாகமாக அஃதாவது உச்சுவாச நிச்சுவாசமாக நடைபெறுகின்றன என்று சாத்திரங்கள் முறையிடுவதற்கு ஒப்ப 216 என்னும் எண்ணுக்கும் 21600 என்னும் சுவாசங்களுக்கும் அன்னியோன்னிய சம்பந்தம் ஒன்று இருப்பதாகத் தெரியவில்லையா? சோதிடத்தில் திசா

மகாமகோபாத்தியாய
டாக்டர். உ. வே. சாமிநாதையர்
நூல் நிலையம்,

புத்தி வருடங்களுக்கு நாள் 360 என்று ஆன்றோரால் ஏற்படுத்தப்பட்டதற்கு ஒப்ப மனித சரீரத்தில் இருக்கும் முக்கியமான எலும்புகளின் தொகை 360 அல்லவா? மனித சரீர அமைப்புக்கு ஒப்ப (அண்டத்துக்கு ஒத்த தே பிண்டத்துக்கும் என்றவாறு) ஒலிவரிவடிவங்கள், நட்சத்திரங்கள், நவக்கிரகங்கள், பஞ்சபட்சிகள் என்பனவும், வைதிகம் எனப்படும் வைத்திய சாஸ்திர உண்மைகளும் ஒன்றுடன் மன்றொன்று சம்பந்தம் உடையனவாகவே இருப்பதையும் இன்னோரன்ன விஷயங்கள் எல்லாம் முத்தியடைதற்கு இன்றியமையாதன என்பதையும் உணரும் பெற்றி உடையார் இப்பூவுலகில் உளரேல் அவரே "பக்குவர்" எனப் படுவர் என்பதில் எட்டுணையும் ஐயமில்லை. அண்டபிண்டங்கள் தம்முள் ஒக்கும் என்பது பின் வரும் பிரமாணங்களாலும் நன்கு புலப்படும்:

திருமந்திரம்

மேருநடுநாடி மிக்கிடை பிங்கலை
கூருமி வ்வானி லிலங்கைக் குறியுறும்
சாருந் திலைவனத் தண்மா மலயத்து
டேறுஞ் சுழினை யிவைசிவ பூமியே.

(ஷை 9-ம் தந். பொற்பதிக்கூத்து செ. (9.)

கோயிற் புராணம்

வலங்கை மான் மழுவோன் போற்றும்
வாரா வரசை நோக்கி
அலைந்திடும் பிண்ட மண்டமவை சம
மாதலாலே
இலங்கை நேரிடைபோ மற்றை
யிலங்குபிங்கலையா நாடி
நலங்கிளரிமய நேர் போம
நடுவுபோம் சுழினைநாடி.

திருவாதவூரர் புராணம்

எண்டரு பூதமைந்து மெய்திய
நாடி மூன்றும்
மண்டல மூன்றுமாகி மன்னிய
புணர்ப்பினாலே
பிண்டமு மண்டமாகும் பிரமனே
டைவராகக்
கண்டவர் நின்றவாறு மிரண்டி
னும் காணலாமே.

தமிழ்ப் பாஷையை ஏற்படுத்தியவர் யார்?

திருப்புகழ்

"............................
முத்தமி ழடைவினை முற்படு
கிரிதனில் முற்பட எழுதிய
............................"
முதல்வோனே

எனவும்,

"............................
அருண தள பாத பத்மம்
அது நிதமு மேதுதிக்க
அரியதமிழ் தானளித்த
மயில் வீரா........."

எனவும் அருளப்பட்ட திருப்புகழின் பொருள் யாது?

பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன் இருந்த அகத்தியனாரும், தொல்காப்பியனாரும் அல்லவா தங்கள் சான்றோர்களாகிய மக்கட்குப் பயன்படுமாறு தமிழ் இலக்கணத்தை வரம்புபடுத்தி வைத்தனர்? அவ் இலக்கணத்தைப் பின்பற்றி அல்லவா சங்கச் சான்றோரும் மற்றைய புலவர் திலகர்களும் பன்னூற்றுக்கணக்கான தமிழ் நூல்களை யாத்தனர்? இத்தகைய வரம்பை மாற்றுவதற்குத் தற்காலத்தவருக்கு நேர்ந்த மதிப்பொலியின் மாண்பு தான் என்னை? இயற்கை முறையான் அமைந்த அரிய பெரிய வேத உண்மைகளையே தம்மகத்துக் கொண்டு மிளிர்கின்ற தமிழ் நெடுங்கணக்கில் சிலவற்றை நீக்கிவிடத்தான் ஒவ்வாதன சிலவற்றைப் புகுத்திவிடத்தான் இவர்கட்கு உளதாய உரிமை தான் என்னை? தமிழ் நெடுங்கணக்கில் உள்ள எழுத்துக்கள் பயனற்றன எனக் கருதத்துணிவாரும் அத்துணிபுகொண்டு தடுமாற்ற வினைகள் புரிய முயல்வாரும் உளராயின் அவர் "உண்மை நிலக்குப் போறை" என்னும் தேவர் திருவாக்கிற்கே இலக்கியமாகித் திகழ்வார் என்பதும், மிகையாகுமா? ஆதலால் இன்னோரன்ன ஆபாச வினைகளில் கைவிடத்துணிந்து தமிழ் அன்னையின் உருவத்தைப் பாழ்படுத்தாது வாளாங்கு வதியும்படி எமது "தமிழ் அன்பர்"களை மிக்க பணிவுடன் வேண்டிக் கொள்ளுகின்றோம்.

இதுகாறும் கூறியவைகளால் "தமிழ் நெடுங்கணக்கு" என்னும் தமிழ் எழுத்துக்கள் இயற்கை முறையான் அமைந்து தத்துவப் பெரியாரால் வரையறுக்கப்பட்ட இலக்கண வரம்பினை உடையன என்பதும் அவற்றுட் சிலவற்றை நீக்கவோ புதியன புகுத்தவோ துணிதல் தமிழ் அன்னையின் இணையில் பேருருவைப் பாழ்படுத்த முயலுதலேயாகும் என்பதும் இன்னோரன்ன விபரீதச் செயல் தமிழ் அன்பராகிய அறிஞர்க்கு ஒரு சிறிதும் உரியதாகாது என்பதும் ஒருவாறு உணரத்தகும்.

திருஞான சம்பந்தர் தேவாரம்

பண். கொல்லி.

சந்துசேனனு மிந்துசே னனுந்
தருமசேனனுங் கருமைசேர்
கந்துசேனனும் கனகசேனனு
முதலதாகிய பெயர்கொளா
மந்திபோற்றி ரிந்தாரியத்தொடு
செந்தமிழ்ப் பயனறிகிலா
அந்தகர்க் கெளியேனலேன் திரு
வாலவாயரன் நிற்கவே.

(ஷை செ. 4.)

சுபம்.

தலையாய அறம்

(7-வது வாரத்தொடர்ச்சி)

ஒக்கல்:—பொருந்தல் எனப் பொருள்படும். பொருந்தல் என்பது போகமும் அகக்கருவி புறக்கருவிகளாகிய சுற்றமும் ஆம் நிறைகொண்டு அருந்தினால் அருந்தியது பொருந்தும் (பொருந்தல் உறவுபடும்) பொருந்தினால் அசுத்த பௌதிகதநவாகிய தாலத்துள்ள சாதலைத்தரும் அசுத்த நிறையாகிய பாசம் அணு அணுவாய் அணைதல் அடையும். இதனால் சரீரமும் அகக்

கருவி புறக்கருவிகளாகிய சுற்றமும் அமலமடைந்து வசப்படும்—உறவுபடும். அம்முன்னிலைகள் தன்னிலையாகும். போகம் நமக்குப்பகை. என்? நிறைமுறை இன்றி நுகருங்கால் பிணி மூப்புச் சாக்காடுகளை விளைத்தலால் என்க. நிறைமுறையோடு நுகர்ந்தே போகங்களை நமக்கு உறவாக்க வேண்டும். மலபோகத்தை விமல போகமாக்கவேண்டும். தன்னிலைச்சிற்றின்பமும் முன்னிலைச்சிற்றின்பமும் நிறை முறையோடு கூடிக்குழைதலாற்றான் நிறைமுறையான இல்லற ஒழுக்கத்தாற்றான் பேரின்பமுளை அங்குரம் பெறவேண்டும். இயற்கை நெறி இதுவே. அன்றேல் பேரின்பத்தடம் புகுவதற்கு வேறு வாயில் எது? பின்வரும் வேதவாக்கு இவ்வுண்மையை நன்கு புலப்படுத்தும்.

திருமத்திரம்

பயனுறு கன்னியர் போகத்தி னுள்ளே
பயனுறு மாதி பரஞ்சுடர்ச் சோதி
யயனொடு மாலறி யாவகை நின்றிட்
டுயர்நெறி யாயொளி யொன்றது வாமே.

(ஷை 9-ம் தந். ஆகாசப்பேறு செ. 4)

விரிப்பின் மிகப்பெருகும். இவ்வுண்மை வேறோர் அத்தியாயமாக விரித்து விளக்கபடும். ஐம்புலங்களைச் சுற்றம் என ஆன்றோருங் கூறினர். "ஐம்புலக் கேளிரும் ஒரு வாய்ப்புக்கன" என்பது கல்லாடம். சுற்றமாகிய கருவிகள் நமக்குப்பகை. என்? அசுத்தமானவையாதலாலும் நாம் விரும்பியவாறு அவை நடத்தலில்லையாதலாலும் என்க. சுற்றம் என்றால் என்னை? நமக்கென்று ஏற்பட்டது சுற்றம் அல்லவா? அல்லஎனினும் அச்சுற்றம் நம்மை விடுமா? அதன் பண்பு நன்றெனினும் தீதெனினும் நம்மைப்பற்றாது விடுமா? இதனாலன்றோ மாணிக்க மணியாகிய நம் கண்மணி "தாமே தமக்குச் சுற்றமும் தாமே தமக்கு விதிவகையும்........" என ஒன்றும் போதா அறிவிலிகளாகிய நமக்கு வற்புறுத்தி அருளியது. இவற்றால் "ஒக்கல்" என்னும் கருவிகளாகிய சுற்றம் "தான்" எனப்பட்டதன் உண்மை கண்டு கொள்க.

தான்:—அருந்தும் உணவு பொருந்துதலால் அகக்கருவி தூய்மையடையவே புறக்கருவியாகிய சுற்றமும் தூய்மை அடையும். அடையவே முன்னிலையெல்லாம் தன்னிலையாகும். தன்னிலை அசுத்தமானதாயின் முன்னிலையும் அசுத்தமானதாயே தோன்றும். இது பற்றியே வினைரூபமாகிய முன்னிலை "தான்" எனப்பட்டது. இதுகாறும் கூறியன கொண்டு தென்புலத்தார் முதலியன "தான்" எனப்பட்டதன் உண்மையை நுண்ணுணர்வால் கண்டு தெளிக.

ஆங்கு:-(உணர்ந்த) அப்பொழுதே என்பது. தென்புலத்தார் முதலியன தன்னையன்றி வேறில்லை என்று குருவருளால் உணர்ந்த ஒருவன் உணர்ந்த அப்பொழுதே மதிவைராக்கியத்தோடு மதிவினை என்னும் புதுவினையைத்தாழாது உஞற்ற வேண்டும் என்பதனை உணர்த்தி நின்றது.

திருக்குறள்

"நாச்செற்று விக்குண்மேல் வாராமுனல் [வினை,
மேற்சென்று செய்யப்படும்"
(ஷை நிலையாமை செ. 5).

என்றாராகலின்! ஆங்கு என்பதனை அசைநிலையாக்கி, தென்புலத்தார் முதலியன தான் என்று உணர்ந்து ஐம்புலத்தாறு ஓம்பல் தலை என உரைப்பதும் ஒன்று. அஃது இத்துணைச் சிறப்பின்று என்க.

ஐம்புலத்தாறு ஓம்பல்:--ஐம்புலநெறியைக் காத்தல். அஃதாவது புரோஹிதனுகிய ஆசான் விதிகளை வழுவறத்தாங்கி ஒழுகுதலே ஐம்புல நெறியைக் காத்தல்—ஐம்புலன்களாகிய முன்னிலைகளில் செல்லும் பொறிகளை அறநெறியினின்றும் பிறழாமல் காத்தல்—அசுத்தஐம்புலவேடனைச் சுத்த நிறை பெறச்செய்யும் நெறியைக் கடைப்பிடித்து ஒழுகி அமலமாக்குதல் என அறிதல் வேண்டும்.

ஐம்புலத்து ஆறு என்பது தூலஉடல் எனினும் ஆம். ஐம்புலன்களும் வெளிப்படுதற்கு—வியாபித்தற்கு—அநுபவிப்பதற்கு வழியாயுள்ளது தூலம் என்க. ஆறு—வழி. ஐந்துக்கும் இடமாகிய அசுத்தமான ஆறு ஆதாரங்களையுடைய தூலம் என்னும் அஃகாணி (அக்காணி) எனினும் அமையும். ஐந்து—பூதம், பொறி, புலன் என்பன. அசுத்தமான ஆறு ஆதாரங்களையுடைய தூலத்தை—அக்காணியை அமலமாக்கி அழிந்துபடாமல் காத்தலே ஓம்பல் என்பது. "கயிற்றும் அக்காணி கழித்துக்காலிடைப் பாசக்கழற்றி" என்பது திருவாய்மொழி. அசுத்தமான பூதம் பொறிபுலன்களையும் அசுத்தமான கீழ் ஆறு ஆதாரங்களையும் அமலமாக்கி அழிந்துபடாமல் காத்தலே ஓம்பல் எனினும் ஆம். இன்னும் எவ்வாறு ஆழ்ந்து ஆய்ந்து உரைப்பினும் அவை யெல்லாம் தூலத்துள்ள சாதலைத் தரும் அசுத்த நிறையை நீக்கி அதனை அமலமாக்கிக்காத்தல் என்னும் ஒரு பொருளே பயந்து நிற்றல் கண்டு கொள்க.

மேலே கூறிய முன்னிலைகள் எல்லாம் "தான்" என்று—தன்னை ஒழியவேறில்லை என்று குருவருளால் அறிந்த ஒருவன் செயற்பால தலையாய அறம் யாதெனின், யான் எனது என்னும் தற்சுதந்தரமாகிய முனைப்பற்று நின்று ஐம்புலத்தாறு ஓம்புதலேயாகும். அஃதாவது குருட்டுப் பார்வையால் யான் எனது என்னும் முனைப்புற்று முன்னிலைக் கோரணிகட்கு ஆட்படாது மதிவைராக்கியம் என்னும் பெருநிறை கொண்ட கருவியைக் கவசமாகப் பூண்டு குரு நெறி கடைப்பிடித்து ஐம்பொறிகளையும் ஐம்புலன்களில் நிறை முறையோடு செல்லவிடுத்து—அவற்றை நிறையோடு பஞ்சீகரணித்து—உறவுபடுத்தி அழுக்கை அழுக்கால் அகற்றுதல் என்னும் இயற்கை முறைக்கு ஒப்ப அம்முன்னிலைகளைக் கொண்டே தன்னிலையைத் தூய்மை செய்ய வேண்டும்; பூதம் பொறி புலன்களையும் ஆதாரங்களையும் தூய்மை செய்ய வேண்டும்; தூலத்தை அமலமாக்க வேண்டும் என்க. "அடல் வேண்டும் ஐந்தன் புலத்தை" என்பது தேவர்வாக்கு. இவ்வாறு தூய்மை செய்யப்பட்டுழி முன்னிலைச் சுட்டுணர்வு ஒழிந்து முன்னிலை தன்னிலைகள் ஒன்றாகி அரிய பெரிய சகசநிட்டை என்னும் இயற்கை நிட்டை கைகூடும். சகசநிட்டையால் தூலம் பூரண அமலம் அடைந்து கட்டுக்கள் எல்லாம் அற்று அன்னுருக்கையாய்ச் சுக்கும (ஓ வடிவம்)மாய் அருள்வடிவாய் உலகு கண்டு போற்ற மறைந்து சிவாங்கமாதலாகிய உண்மைச் சைவ முத்தி நிலை கைகூடும் என்க. இவ்வரிய பெரிய தமிழ் வேதச் செய்யுளால் கூறப்பட்ட தலையாய அறத்தின் பயன் இதுவே என அறிதல் வேண்டு.

தலை:—சற்குருநாதனுகிய ஆசான் உரைவழி நின்று ஐம்புலத்தாறு ஓம்புதலே சதுர்வித புருஷார்த்தம் என்னும் நாற் பொருட் பயனையும் ஒருங்கே அளிக்க வல்ல உண்மைத்தவமாகிய வாய்மையாகிய அறநெறி

(7-ம் பக்கம் பார்க்க)

இருக்குவேத உண்மை

சீதையை வந்தித்தல்

ஸீதையை வந்தித்தல் வேண்டும் எனவும் அதனால் வாய்மையான பொருள் கை கூடும் எனவும் வாய்மையான வாழ்வு—நித்தியத்துவம் உளதாகும் எனவும் இருக்கு வேதம் கூறுகின்றது. இவற்றின் உண்மை இன்னது என ஒரு சிறிது ஆராயப்படும்.

இருக்கு அஷ்டகம் 3; அத். 8; வர்க்கம் 8; மண்டலம் 4; அநுவாகம் 5; சூக்தம் 12.

" அண்மையாற் சவு
பாக்கிய மடைந்தவுறுக
நுண்மையா லுனைச் சீதையே
வந்திப்போ மொளிசார்
திண்மை நற் பொருளளித்து நற்
பலனினைச் சேர்த்து
வண்மையோ டெமை
வாழ்விக்கும் காலத்து மகிழ்ந்தே"

" இந்திரன் பிடித்திடுக வித்
சீதையைப் பூடன்
அந்திவன் னதைச் செவ்வனே
யமைக்க வவ்வான
மூர்து பாலிலே டெங்களை
யளித்திட முறையே
எந்த வாண்டுமே ஈனமா
யிலைகு வோன் கறக்க."

சீதையை வந்தித்தல்—பூசித்தல்—அடைதல் என்றால் என்னை? நமது சரீரம் அம்மை அடைந்தாலன்றி வேறு வகையால் படியேற்றம் பெறுவது—முத்திநெறி செல்வது முயற்கொம்பே என்பதில் ஐயமுண்டோ? இது அரிய பெரிய தத்துவார்த்தம். வேதத்தின் உட்பொருள் இதுவே. இதனுள் எல்லாம் அடங்கிவிட்டன. சீதை என்றால் என்னை? சீதை என்றால் இலக்குமி என்பர். ஸ்ரீதேவி என்பர். சீதையே ஸ்ரீதேவி. இதுவே "ஸ்ரீ" என்பது. ஐந்தில் நடுநாயகமாகிய சிகாரம் இதுவே. இதன் உண்மை அமயம் நேரும் போது விளக்கிக்கூறப்படும். இதனையே "ஓ" என்பர்—"ஸ்ரீ" என்பர். சீதரன் என்றால் இலக்குமி நாயகன் என்பர். "ஸ்ரீ" என்னும் சீதையை—இலக்குமியை அடைய முயல்வதே செயற்கரிய நற்றவம். "ஸ்ரீ" என்னும் சீதையை அடைய முயலுவதே வேண்டியவற்றை எல்லாம் வேண்டியவாறு அடைதற்கு உரிய அரிய பெரிய தவம் என்க. இதற்கு மதிமுயற்சி என்னும் மதி வைராக்கியம் வேண்டும். ஆண்மை வேண்டும். புய்ஸத்துவம் வேண்டும். ஆதலால் இத்தவம் எளிதன்று.

" தான் என்ற வாலையவள்
உருவங் காணச்
சமர்த்துண்டோ
ஆண்பின்னை தானுமுண்டோ
.................................."

என்றனர் அரும் தவத்தால் சீதையை அடையப்பெற்று நித்தியத்துவம் பெற்ற கருவூரார். திரோதானம் என்னும் மாமுகடி முகடியாகிய மூதேவி, மூதேவி என்னும் மூத்தவளாகிய அசுத்த காயப்பெண் அவ் அசுத்தம் நீங்கி—மலம் நீங்கி விமல காயப்பெண்ணாக — சீதையாக மாற்றம் அடைவதே சீதையை வந்தித்தல்—அடைதல் என்பதன் பொருளாகும். அஃதாவது காயமாயம் கழிதற்கு ஏற்ற ஒழுக்கமே—சாதகமே சீதையை வந்தித்தலாகிய தவமும், அக்காயமாயம் கழிதலே — காயம் விமலம் அடைதலே சீதையை அடைதலுமாம் என்பது. பின்வரும் தேவர் திருவாக்கும் இவ்வுண்மையை நன்கு புலப்படுத்துகின்றது.

திருக்குறள்

" மடியுளாள் மாமுகடி
யென்ப மடியிலான்
தாளுளாள் தாமரையினாள் "
(அதி. ஆள்வினையுடைமை செ.7.)

இருள் வடிவாகிய அஞ்ஞானம் அவித்தை என்னும் மூதேவியானவள் ஒருவன் சோம்பலின் கண்ணே தங்கி இருக்கின்றனள் எனவும், நெஞ்சத்தாமரையில் வீற்றிருக்கும் ஞான ஒளி வடிவினளாகிய ஸ்ரீதேவி என்னும் இலக்குமி ஆனவள் அச் சோம்பல் இல்லாதவனது மதிமுயற்சியின் கண்ணே தங்கி இருக்கின்றனள் எனவும் அறிஞர் கூறுப என்பது இதன் பொருளாகும்.

மடி என்பது என்னை? அதுதான் ஊழ் என்னும் விதிவசப்பட்டு மடிந்திருத்தல்—சோம்பியிருத்தல் என்பது. மா என்பது இங்கே அசுத்தமாயை என்னும் அவித்தையை உணர்த்தி நின்றது. தாள் என்பது மதிமுயற்சி. தாமரை நெஞ்சத்தாமரை. முயற்சி, தாமரை என்னும் சொற்களின் உண்மைப்பொருள் அமயம் நேர்ந்தபோது விளக்கிக்கூறப்படும். முகடி, சேட்டை, மூத்தவள், மூதேவி, அருக்கு நாச்சியார், அசுத்த தேகம் என்பன ஒரு பொருட் சொற்கள். சீதை, ஸ்ரீதேவி, இலக்குமி, இந்திரை, பெருக்கு நாச்சியார், விமல தேகம் என்பன ஒரு பொருட் சொற்கள். குரு அருளால் பெறப்படும் மதி வினையாகிய புது வினையால் விதிவினையாகிய பழ வினை வெல்லப்பட்டபோது வினைப் போக தேகம் என்னும் முகடிவடிவாகிய அசுத்த பௌதிக தநுவானது அவ் அசுத்தம் நீங்கிச் ஸ்ரீதேவி வடிவமாகிய விமல பௌதிக தநுவாக மாற்றமடைய மகைசுவரியமாகிய இந்திரச்செல்வம் உளதாகிப் பிணி மூப்புச் சாக்காடுகள் நீங்கி நித்தியத்துவம் அடையப்படும் என்பதும், மதி முயற்சி இன்றி மடிந்திருப்பதால் விதியை வெல்ல முடியாது பிணி மூப்பு முதலிய நல்குரவால் நலிந்து சாக்காடு அடைந்து பிறவி வலைப்படுதல் கை கூடும் என்பதும் இச் செய்யுளால் நன்கு பெறப்படுதல்கண்டு கொள்க.

அசுத்த பௌதிக சரீரமாகிய வினைப் போக தேகம் வெல்லப்பட்டபோது (விமலமானபோது) மகைசுவரியமாகிய இந்திர போகம் உளதாகும் எனவும், சரீரம் விமல ஒளி மயமாகும் எனவும் இப் பெற்றி வாய்த்தவனுக்குப் பிணி மூப்புச் சாக்காடுகள் நீங்கி நித்தியத்துவம் உளதாகும் எனவும் சுவேதாசுவதர உபநிடதமும் கூறுகின்றது. அச்சுலோகம் வருமாறு:—

" ப்ருதிவ்யப் தேஜோ
நிலகே சமுத்திதே
பஞ்சாத்மகே யோககுணே
ப்ரவ்ருத்தே; நதஸ்ய
ரோகோ நஜரா நம்ருத்யு:
ப்ராப்தஸ்ய யோகாக்நி
மயம் சரீரம்."

என்பது சுலோகம்.

(இ—ள்) பஞ்சாத்மகே ப்ருதிவி அப்தேஜ அநிலகேசமுத்திதே—ஐந்து தன்மைகளையுடைய நிலம் நீர் தீ வளி வெளி என்னும் இவை (இவற்றாலாய முன்னிலை தன்னிலைகள்) வெல்லப்பட்டபோது, யோக குணே ப்ரவ்ருத்தே — (வாய்மையான) யோகத்தின் பயனான மகைசுவரியம் (இந்திர போகம்) அடையப்பட்டபோது, யோகாக்நி மயம் சரீரம் ப்ராப்தஸ்ய — யோகத்தாலான விமல ஒளிமயமான சரீரத்தை— விமலகாயத்தை அடையப்பெற்றவனாகிய அவனுக்கு, நரோக:—பிணி இல்லை, நஜரா:—சரை இல்லை (மூப்பில்லை) நம்ருத்யு:—மரணம் இல்லை என்பதாம்.

பஞ்ச பூதங்களால் ஆக்கப்பட்டது இவ்வுலகம். தாபர சங்கமங்கள் எல்லாம் பஞ்ச பூதங்களாகிய கருக்களால் ஆக்கப்பட்டனவே. இது உலகம் அறிந்த இரகசியம்.

“ நிலம் நீர் தீ வளி
விசும் பொடைந்தும்
கலந்த மயக்கம் உலகமாதலின்”

என்பது தொல்காப்பியம்.

“ மண் திணிந்த நிலனும்
நிலனேந்திய விசும்பும்
விசும்புதை வருவளியும்
வளித்தலைஇய தீயும்
தீமுரணிய நீரும் என்றாங்கு
ஐம்பெரும் பூதத்து இயற்கை
[போல”

என்பது தலைச்சங்கத்து நல்லிசைப்புலவராகிய முரஞ்சியூர் முடிநாகராயர் வாக்கு. (புறநானூறு.)

ஐம்பூதம் வெல்லப்பட்டன எனவே அவற்றாலாய சரீரம் வெல்லப்பட்டமை சொல்லாமலே அமையும். வாய்மையான யோகப் பயன் அமலப்படிப்பேறு இதுவே. இந்திர போகமகிய மகைசுவரியம் அளிப்பது இந்திரையாகிய இலக்குமியை இலக்குமியாகிய சீதையை அடைதல் என்பது இதுவே.

சீதையை அடைதலால் வாய்மையான பொருள், பொருளாகிய பொன் கைகூடும். இதுவே பொற்சுண்ணம் — செம்பொன் செய்சுண்ணம். அம்மையப்பருக்கு உவப்பான பொன் இதுவே. இப்பொன்னால் நினைத்த வெல்லாம் அடையலாம். அருந்தவப்பயன் இதுவே.

“முனிவரு மன்னரு முன்னுவ பொன்
[னால் முடியும்”

(திருக்கோவை. செ 332.)

எனப்புகழப்பட்ட பொன் இதுவே. மகைசுவரியமாகிய இந்திரபோகம் அளிப்பது இதுவே; நித்தியத்துவம் அடையச் செய்வது இதுவே. இது பற்றியே

“ ஒளிசார் திண்மை நற்பொருள்
அளித்து நற்பலனினைச் சேர்த்து
வண்மையோ டொமை
வாழ் விக்குங்காலத்து மகிழ்ந்தே”

என்று கூறப்பட்டது. வாய்மையான பொன் இன்னது என அதன் இலக்கணம் அமயம் நேரும்போது மேலும் விளக்கிக் கூறப்படும்.

இவ் அமல முதற்படியே வழி—முத்தி வாயில், இவ்வழியில் நிற்பவரே வழியடியார். இவரே இந்திரர். “வானுடர் கோவும் வழியடியார் சாழலோ” என்பது திருவாசகம். (திருச்சாழல் செ. 12.) இதுபற்றியே “இந்திரன் பிடித்திடுக இச்சீதையை” என்று கூறப்பட்டது. வழியடியாராகிய இந்திரர் மாண்பு அமயம் நேரும்போது விளக்கிக்கூறப்படும்.

இதுகாறும் கூறியவைகளால் முத்திவாயில் என்னும் அமல முதற்படியை அடைதலாகிய விமலகாயம் பெறுதலே “சீதையை வந்திப்போம்” என்னும் இருக்கு வேதக் கற்பனையின் உண்மைப் பொருள் என்பது ஒருவாறு உணரத்தகும்.

தலையாய அறம்.

5-ம் பக்கத் தொடர்ச்சி

யாகலின், இதனின் மிக்கது பிறிதில்லை என்பாராய் “தலை” என்றார். இத்தமிழ் வேதச்செய்யுட்கு உண்மைப்பொருளாகிய செம்பொருள் இதுவே என்பது நன்கு கடைப்பிடிக்க.

“தடுகைத்துளைத் தேழ் கடலைப் புகட்
[டிக் குறுகத்தறித்த குறள்.”

என ஆன்றோர் கூறியவாறு, உண்மையை உணரும் ஆற்றலும் காதலும் உடையார்க்கு அன்னோர் அறிய வேண்டிய வேத உண்மைகளை எல்லாம் தன்னகத்துக்கொண்டு பொய்யில் புலவர் பெருமான் புகழ்போல நிற்கின்றது இவ் அரிய பெரிய குறட்பா என்பதில் எட்டுணையும் ஐயமில்லை.

பலகோடி சென்ம நற்றவப்பயன் திரண்டு ஒரு வடிவெடுத்த வித்தகரே சற்குரு நாதன் அருளால் இத் தலையாய அறநெறியைக் கடைப்பிடித்து, அஃதாவது வாய்மையான இயம நியமாதிகளைக் கைக்கொண்டு ஒழுகி உய்தியடையவல்லராவர். “ தவமும் தவமுடையார்க்காகும் ” என்பது தேவர்வாக்கு.

மார்க்கண்டேய முனிவர் முதலிய எத்தனையோ முனிவர்களும் இருடிகளும், அரசர்களும், பிறர் பலரும், மணிவாசகப் பெருமானும், அறுபத்து மூவரும், ஆழ்வார் என்னும் திருநாமத்துக்கு வாய்மையில் இலக்கியமாகி வதிந்த மகான்களும், பட்டினத்தார், பத்திரகிரியார், சேந்தனார், முத்துத்தாண்டவர் என்பவர்களும் முன்னிலைகளை நிறைகண்டு பஞ்சீகரணித்து— உறவு படுத்தி அஃதாவது இத்தலையாய அறநெறியைக் கைக்கொண்டு ஒழுகுதலாகிய உண்மைச் சிவபூசையால் காலனைக் காலால் உதைத்து — விதியை வென்று நித்தியத்துவம் அடைந்தவரேயாவர். கடல் கடைந்து அமுதம் பெறுவது — நஞ்சை அமுதமாக்குவது—முன்னிலையைத் தன்னிலையாக்குவது — மாயையை அடிப்படுத்துவது —உண்மைச் சிவலிங்க பூசையால் காலனை வெல்வது என்றால் எளிதின் முடியுமா? சிவலிங்க பூசையின்றி— சங்கர பூசையின்றிக் காலன் அடிமைப்படுவானோ ? ஆலம் அமுதமானலன்றி—ரக்ஷக தேகம் எனப்படும் இடப தேகத்தைப் பெற்றாலன்றி நித்தியத்துவம் அடைவதென்பது—தூலம் பிணமாகி விழ இறந்தபின் முத்தியடைவதென்பது வெற்றுரையே என்க. முன்னிலைகளை நிறைகண்டு பஞ்சீகரணிப்பதே வாய்மையான அங்கலிங்க வழிபாடுமாகும். அங்கம்—தன்னிலை லிங்கம்—முன்னிலை. இவை தம்முள் ஒன்றுவதே ஐக்கியம் ஆகும். இதனாற்றான் பதி பசு பாசம் அநாதி எனப்பட்டன. பாசமே பாசம் என்னும் மலமே பரிபாகமுற்று அமலம் என்னும் அருட்சத்தியாகி — ஞானசத்தியாகி மாறுவதாகும். அஃதாவது மாயக்குரம்பை என்னும் செடி சேருடலமானது —மலக்குரம்பையானது அசுத்த நிறை நீங்கி நித்தியத்துவ நிறையாகிய அமல நிறைபெற்று அமலக்குரம்பையாகி மாறுவதாகும். மாறிப்பிறத்தல் என்பது இதுவே என அறிதற்பாற்று. “மாயக்குரம்பை நீக்க வழிவைத்தார்க்கவ்வழியே போது நாமே” எனவும் “பூந்து

"வித்தகம்" பெற்ற மதிப்புரை.

இலங்கை பேராதனை
அரசினர் கிருஷிக நிலயத்தில்
பிரதம லேககராய் இருப்பவர்களும்
சமயசாத்திரங்களில் மிக்க
பாண்டித்தியம்
உடையவர்களுமாகிய
சைவத் திருவாளர்
அ. விசுவநாதன், பி., ஏ.,
அவர்கள்
"வித்தகத்துக்கு" உதவிய
வாழ்த்துரை.

"தங்கள் "வித்தக"ப் பத்திரிகை
"வரப்பெற்றுப் படித்து மகிழ்ந்தேன்.
"ஆரம்ப சூரர் முயற்சிபோல் ஆகாது
"வித்தகம்" நெடுநாள் நின்று நிலவி
"எமது பாஷை சமயம் என்பவை
"களை விருத்தி செய்யும் வண்ணம் எம்
"பெருமான் திருவருள்பாலிப்பாராக"

குறிப்பு:— இப் பத்திரிகைப் போசிரியர்பால் தமதுளத் தாக்க முற்ற வாய்மையான அன்பையும் நட்புரிமையையும் வெளிப்படக் காட்டி எமது "வித்தகம்" எம்பெருமான் திருவருட் பிரசாதம் பெற்று எத்தகை இடையூறு மின்றி வளர்ந்து ஓங்க வேண்டுமென ஆசிகூறிய இப் பெரியாருக்கு எமது அன்பார்ந்த வந்தனம் என்றும் உரிமையாகற்பாலதேயாம்.

[ப-ர்]

"வித்தக" மதிப்புரை

யாழ்ப்பாணத்து நல்லூர் கைலாயநாத சுவாமி தேவஸ்தான தருமகர்த்தரும், ஆதிசைவ அந்தணர்குல திலகரும், சிவாகம விற்பன்னரும், சோதிடத் தலைவரும், யந்திர வித்வ சிகாமணியும், கிரியா காண்டக் கண்ணாடியுமாகிய (தம்பையாக் குருக்கள் எனப் பிரசித்தியாக வழங்கப்படும்) ப்ரம்ம ஸ்ரீ ந. வே. கார்த்திகேயக் குருக்கள் அவர்கள் பணித்த திருமுகம்:—

தங்கள் "வித்தக"ப் பத்திரிகை வரப்பெற்றுப் படித்து மகிழ்ந்தேம். 1-ம் இலக்கப் பத்திரிகையில் வித்தகம் என்பதன் பொருள் மிகத் திறமாக விளக்கப்பட்டிருந்தது. இத்தகைய விளக்கமான பொருளை இப்பத்திரிகையிலன்றி வேறு எவ்விடத்தும் யாம் காணவில்லை. அரிய பெரிய வேதங்களின் உண்மைப் பொருளை அறியும் ஆற்றலும் காதலும் இல்லாத அன்னிய பாஷா பண்டிதர் சிலர், பொருளாவுடைய சம்ஸ்கிருத பண்டிதர் சிலரிடம் அவ்வேதங்களைக் கேட்டறிந்து, அவற்றை விநோதார்த்தமாக மொழிபெயர்த்து விட்டார்கள். அம் மொழிபெயர்ப்பு நூல்களைப் படித்த சைவப் பண்டிதர் சிலர் அவ் அந்நியர் கூற்றையே உண்மை என நம்பி அவ் வேதங்களின் உண்மைப் பொருளை அறியாது மயங்கி அவற்றைப் புறக்கணிப்பாராயினர். தற்காலம் போலவே முற்காலத்தும் சமண பௌத்தர் முதலிய புறச் சமயிகள் மனம் போனவாறு வேதங்களை அவமதித்து அவற்றைத் தடுமாற்றம் அடையச் செய்தார்கள். அக்காலத்தில் வேதவியாச மகா முனிவர் தோன்றி அவ்வேதங்களை வகுத்து உண்மைப் பொருளை விளக்கி அவற்றை நிலைநாட்டி வைத்தனர். இவ் உண்மை பின் வரும் பிரமாணங்களால் அறியக் கிடக்கின்றது.

கந்தப்புராணம்.

"முந்தொருகாலத்தில் மூவுலகந்தன்னில்
வந்திடுமுயிர்செய்த வல்வினையதனாலே
அந்தமின்மறையெல்லா மடிதலைதடுமாறிச்
சிந்திடமுனிவோருந் தேவருமருளுற்றார்"

"எத்திறு சுருதிகளிசைக்கு மாண்பொருள்
மாத்திரைப் படாவென மாசில்காட்சியர்
பார்த்துணர்பான்மை யாற்பல வகைபடச்
சூத்திரமானவும் சொற்று வைகினன்."

"கரையறுவேத மாக்கடலை நான்கவாய்ப்
பிரிநிலையாக்கியே நிறுவுபெற்றியால்
புரைதவிர் முனிவரன் புகழ்வியாதனென்
றொருபெயர்பெற்றனனுலகம்போற்றவே"
(ஷை. பாயிரப்படலம்).

வேத உண்மைகள் மறைந்து, உலகம் தடுமாற்றம் அடைந்து நிற்கும் இக்காலத்தில் "வித்தகம்" என்னும் ஞானபாஸ்கரன் வேத சிவாகமங்களின் மறைபொருள்களை எடுத்துக் காட்டி உலகோர் அறியாமையை நீக்கி அவ்வேத சிவாகமங்களை நிலைநாட்டமுன் வந்திருப்பது கண்டு யாம் அளவிறந்த ஆனந்தம் அடைகின்றேம். "வித்தகம்" பல்லாண்டு வாழ்க.

யாழ்ப்பாணத்து நல்லூர் கைலாயநாத சுவாமி தேவஸ்தானம் 11—1—34	இங்ஙனம். ந.வே. கார்த்திகேயக் குருக்கள்.

குறிப்பு:—இம் மதிப்புரையை மனமுவந்து எமக்குதவிய இவ் ஆதிசைவ அந்தணகுலதிலகருக்கு எமது அன்பார்ந்த நமஸ்காரம் சமர்ப்பிக்கற்பாலதே யன்றி, கைம்மாறு பிறிதொன்றும் அறியகில்லேம் என்றுமிகப்பணிவுடன் தெரிவிக்கின்றேம்.

[ப-ர்]

குந்தி புந்திருத்தி என்பீராகில் பொல்லாத புலாற்றுருத்திபோக்கலாமே" எனவும் நமது அப்பர் அருளிய அருமறையின் உண்மைப்பொருளை உணர்வார்ப்பெறின், மாயக்குரம்பை என்னும் மலக்குரம்பை அமலக்குரம்பையாகி மாற்றமடைந்து, பாசங்கள் பற்றுக்கள் எல்லாம் அற்று நித்தியானந்தப் பெரும் பேறடைவதே —நித்தியத்துவம் அடைவதே ஐம்புலத்தாறு ஓம்பலாகிய தலையாய அறநெறியின் பயன் என்பது தடக்கை நெல்லிக்கனி என விளக்கம் பெறும் என்பதில் எட்டுணையும் ஐயமில்லை. இதுகாறும் கூறியவைகளால்,

"தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கலென்றாங்கைம்புலத்தாறோம்பறலை"

என்னும் அரிய பெரிய தமிழ்வேதச் செய்யுள் அரசிய பொருளாகிய தலையாய அறம் இன்னது என்பதும் அச் செய்யுளின் உண்மைப்பொருளும் ஒருவாறு உணரத்தகும். (முற்றிற்று.)

Sandhanam Printing Works, Pondicherry. Le Gérant R. Nagarattinam.